செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 2 நாள்: 02.01.2018

# புத்திரிக்கை செய்தி

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ2) துறை அரசாணை நிலை எண்.135, நாள். 03-08-2017-ன் படி தொழிலாளர் பயனடையும் வகையில் 28-12-2017 அன்று வாணியம்பாடியில் புதியதாக தொழிலாளர் அலுவலர்-2 (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது. இவ்வலுவலக ஆட்சி எல்லைக்குள் குடியாத்தம், பேர்ணாம்பட்டு, ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் மற்றும் நாட்றாம்பள்ளி ஆகிய 6 தாலுக்காக்கள் அடங்கும் இப்பகுதிகளில் உள்ள கட்டுமானத் தொழிலாளர் மற்றும் அமைப்புசாரா தொழில் புரியும் தொழிலாளர்கள் வாணியம்பாடியில் இயங்கும் புதிய அலுவலகத்தில் பதிவு மற்றும் புதுப்பித்தல் செய்து அரசின் நல உதவி திட்டங்களில் சலுகைகள் பெற்று பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேற்படி தாலுக்காக்களில் உள்ள தொழிலாளர்கள் வேலூரிலுள்ள தொழிலாளர் அலுவலர்-1 (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகத்திற்கு செல்ல வேண்டியதில்லை எனவும் வாணியம்பாடியில் கீழ் கண்ட முகவரியில் இயங்கிவரும் புதிய அலுவலகத்திற்கு வந்து பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது இத்தகவலை வாணியம்பாடி, தொழிலாளர் அலுவலர்-2 (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.இரா.ஜெய்சங்கர் அவர்கள் தெரிவித்தார்.

<u>அலுவலக முகவரி</u>

தொழிலாளர் அலுவலர்-2 அலுவலம்,
எண்.393, சி.எல்.ரோடு,
வாணியம்பாடி-635751.
வேலூர் மாவட்டம்.
04174-229995

02/1/2018
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.

தொழிலாளர் அலுவலர்-2, 2/1/18
(சமூக பாதுகாப்பு திட்டம்)
வாணியம்பாடி,

2/1/18